DEPOSITION OF WITNESS

(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
O.S.No. 235/2019
****

| | |
|---|---|
| Deposition of Witness for | : DW1 |
| Name | : கருப்பசாமி |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 06.03.2026 |

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் இவ்வழக்கின் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதி தரப்பு முதல் சாட்சி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிணிமயமாக்கப்பட்டது. கடந்த 1982 ம் ஆண்டு கோபால் தேவர் என்பவருக்குரிய **குடும்ப அட்டை** அசல் **பி.வா.சா.ஆ.1** ஆகும். 26.04.1929 ம் தேதியில் வீருத்தேவர் குமாரர் ஆறுமுகத்தேவர் –1 மேற்படியார் மகன் காலம்சென்ற குருசாமி தேவர் மகன்கள் மைன் குருசாமி தேவர் –2, மேற்படி 1 வது நபர் ஆறுமுகத்தேவர் குமாரர்களான வீருத்தேவர்–3, சீனித்தேவர்–4 மைனர்களான சாத்துாரப்ப தேவர்–5, மலையாண்டித்தேவர் – 6, மற்றும் சுப்பைய தேவர்–7, மேற்படியார் 2,5,6,7 இலக்க நபர்களுக்கு கார்டியனாக 1 ம் லக்க நபர் மூலம் கரிவலம்வந்தநல்லூர் சார்பதிவாளர் அலுவலக பாக விஸ்தி ஆவண எண். 403/1929 ன் படி பிறப்பித்துக்கொண்ட **பாக விஸ்தி ஆவணம்** SRO நகல் **பி.வா.சா.ஆ.2** ஆகும். 09.11.2009 ம் தேதியிட்ட கரிவலம்வந்த நல்லூர் சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண். 2950/2009 ன் படி வழக்கு சொத்தின் ஒரு பகுதியான சங்கரன்கோவில்

வட்டம் கலிங்கப்பட்டி கிராமம் பாகம் –1 புஞ்சை புல எண். 760 நிர் ஏ–2 செண்ட் 61 ஐ பொறுத்து பிரதிவாதி என்பவர் சுப்புத்தாய் என்பவரிடம் **கிரையம் பெற்ற கிரைய ஆவணம் அசல் பி.வா.சா.ஆ.3** ஆகும். 25.01.2010 வழக்கு சொத்தின் ஒரு பகுதியான சங்கரன்கோவில் வட்டம் கலிங்கப்பட்டி கிராமம் பாகம் –1 புஞ்சை புல எண். 760 ஐ பொறுத்து பிரதிவாதி பெயரில் உள்ள **பட்டா அசல்** (சங்கரன்கோவில் துணை வட்டாட்சியர் வழங்கியது) **பி.வா.சா.ஆ.4** ஆகும். 11.11.2011 வழக்கு சொத்தின் ஒரு பகுதியான சங்கரன்கோவில் வட்டம் கலிங்கப்பட்டி கிராமம் பாகம் –1 புஞ்சை புல எண். 760 ஐ பொறுத்து பிரதிவாதி மற்றும் கருப்பாயம்மாள் செல்லையாத்தேவர் மாரிச்சாமி ஆகியோர்கள் பெயரில் உள்ள **கூட்டு பட்டா அசல்** (சங்கரன்கோவில் துணை வட்டாட்சியர் வழங்கியது) **பி.வா.சா.ஆ.5** ஆகும்.

குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/–P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.